**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) – 2020**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எஸ்எல் - பி 108 இலக்க 2013 மார்ச் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஜப்பான் யென் 3,751 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. கடன் மீளப்பெறல் காலாவதி 2021 ஜுன் 5 இல் மூட பட்டியலிடப்பட்டிருந்ததுடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை கடன் நீடிப்பினை வழங்க விருப்பப்படவில்லை. அதன் பெறபேறாக ரூபா 7,760 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 4,595 மில்லியன் அல்லது மொத்தக்கடனில் 37 சதவீதம் செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்பரப்பிற்கு பயன்படுத்த முடியாமல் போகக் கூடும்.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பிரிவு 3.2.2. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக, ரூபா 1.4 மில்லியன் தொகையான சம்பளம் பிழையான சம்பள படி செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டதன் காரணமாக 02 உத்தியோகத்தர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் 2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய முகாமைத்துவ செவைகள் சுற்றறிக்கை இல 01/2013 இன் பிரிவு 3.2.3 மற்றும் 2016 பெப்ரவரி 25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 | சுற்றிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக, செயற்திட்டமானது 2021 ஜூலை 31 இல் உள்ளவாறு எஸ்பிஎம்யூவின் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் 3 பேரிற்கு 50 சதவீத கொடுப்பனவு, ஈபிஎப் (EPF) மற்றும் ஈடிஎப் (ETF) உள்ளடங்களாக ரூபா 1.9 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டவணை 01 இல் கூறப்பட்டிறாத செயற்திட்ட உத்தியோகத்தர்களின் பதவிக்கான சம்பளம் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 இல் ஆரம்ப ஆட்சேர்ப்பு கட்டத்திலான சமனான பதவிக்கான சம்பளத்தின் ஆரம்ப நிலையின் அடிப்படையில் காணப்படல் வேண்டும். |

## 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடனானது 2013 ஜூன் 05 இலிருந்து செல்லுபடியாகியிருந்தும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பால நிர்மானத்தின் தாமதம் காரணமாக, ஜப்பான் யென் 12,381 மில்லியனில் ஜப்பான் யென் 4,586 மில்லியன் அல்லது மொத்த கடனில் 37 சதவீதம் பயன்படுத்தப்படாமலிருந்தது. அதன் பெறுபேறாக, மொத்தமாக ரூபா 84 மில்லியன் ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், செயற்திட்டமானது 2020 ஜூன் 5 | ஜைசீஏ(JICA) ஆனது பொதி 3 உடன் செயற்படுத்த ஒப்புதல் வழங்கியிருக்காததுடன் 2020 ஜூலை 02 இல் கடனை முடிவுறுத்தி இறுதியாக தீர்மானித்திருந்தது. | கடன் காலப்பகுதியினுள் வேலைப்பரப்பினை பூர்த்திசெய்ய பால நிர்மான வேலைகளை திட்டமிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலிருந்து 2021 ஜூலை 5 வரை கடனிலிருந்து எவ்வித தொகையினையும் மீளப்பெற்றிருக்கவில்லை. இருப்பினும், ரூபா 4 மில்லியன் ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பால வடிவமைப்பு மற்றும் கண்கானிப்பிற்கான ஆலோசனை சேவை 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 37 பாலங்களின் வடிவமைப்பு 2015 இல் ஆலோசகரினால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மொத்த வடிவமைப்புக்களில், 8 பால வடிவமைப்புக்கள் மாத்திரம் கடன்காலம் முடிவில் 2 ஒப்பந்த பொதிகளின் கீழ் 18 புதிய பாலங்களின் நிர்மானத்திற்காக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, 19 பாலங்களின் வடிவமைப்பிற்காக செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட அண்ணளவாக ரூபா 275 மில்லியன் கிரயம் செயற்திட்டத்திற்கு பயனற்றதாக போய் காணப்பட்டது. | ஆர்டிஏ வானது ஏனைய செயற்திட்டங்களின் கீழ் அவைகளை மீள்புனரமைப்பதற்காக எம்பீசிபியினால் செய்யப்பட்ட மிகுதி 19 பாலங்களின் வடிவமைப்பினை பயன்படுத்துகின்றது. | நட்டத்தினை குறைக்க எதிர்கால பால நிர்மான வேலைகளில் மிகுதி வடிவமைப்புக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 3 ஒப்பந்த பொதிகளின் கீழ் 22 பாலங்களினை நிர்மானிப்பதற்காக 172 அரசகாணிகள் உள்ளடங்களாக 395 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்ததுடன் ரூபா 337 மில்லியன் தொகையான இழப்பீடு 2020 திசெம்பர் 31 வரை 121 காணித்துண்டுகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, கூட்டு மொத்தமாக ரூபா 41 மில்லியன் மீளாய்வாண்டிள் இறுதியில் இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதத்திற்கான வட்டியாக செலவிட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 36 காணித்துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு-செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலம், காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்காக செயற்திட்டத்தினால் மொத்தமாக ரூபா 34 மில்லியன் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் பொதி – 03 செயற்திட்டத்தின் பற்றாக்குறையான நிதி வசதிகளின் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கொள்வனவு செய்யப்பட்ட காணித்துண்டுகளையும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய உரிய பிரதேச செயலாளர்களுடன் நடவடிக்கைகள் செயன்முறையிலுள்ளது. இருப்பினும் இச்செயன்முறை கோவிட் தொற்றுநோய் பரவல் காரணமாக தாமதமாகவுள்ளது. | மிகுதி காணி கொள்வனவினை நிவர்த்திசெய்யய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, போதுமான திட்டமிடல், செயலாற்றல் மீளாய்வு, கண்கானிப்பு மற்றும் இழப்பீடு கொடுப்பனவுகள் மீதான கண்கானிப்பு என்பன தேவைப்படுகின்றது. |